BSNL ஊழியர் சங்கம்

தமிழ் மாநிலம்

சுற்றறிக்கை எண்:126 **தேதி**:-31.08.2016

வெற்றிகரமாக்குவோம் செப்டம்பர் 2 வேலை நிறுத்தத்தை

அன்பார்ந்த தோழர்களே,

செப்டம்பர் 2 வேலை நிறுத்தத்திற்கான தயாரிப்பு பணிகள் நாடு முழுவதும் வெகு வேகமாக உத்வேகத்துடன் நடைபெற்று வருகிறது. ஆனால் மத்திய ஆட்சியாளர்கள் வேலை நிறுத்த அறிவிப்பு வெளியிட்ட தொழிற்சங்கங்களை பேச்சு வார்த்தைக்கு அழைக்காமல் வேலை நிறுத்த அறிவிப்பு வெளியிடாத RSSன் இணைக்கப்பட்ட சங்கமான BMS சங்கத்தோடு பேச்சு வார்த்தை நடத்துகிறது. அவர்களும் அரசாங்கத்தின் வெற்று வாக்குறுதிகளை நம்பி வேலை நிறுத்தத்தில் இருந்து விலகி நிற்பதாக அறிவித்துள்ளனர். ஆனால் இந்திய நாட்டு தொழிலாளி வர்க்கம் இந்த செப்டம்பர் 2 வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்குவது என்ற முடிவில் உறுதியுடன் நிற்கின்றனர்.

30.08.2016 அன்று மத்திய நிதி அமைச்சர் ஒரு சில சலுகைகளை அறிவித்து விட்டு வேலை நிறுத்தத்தை விலக்கிக் கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார். ஆனால் தொழிற்சங்கங்கள் அதனை நிராகரித்து பொது வேலை நிறுத்தம் திட்டமிட்டபடி செப்டம்பர் 2 அன்று கண்டிப்பாக தெரிவித்துள்ளனர்.

வேலை நிறுத்த அறிவிப்பை வெளியிட்டுள்ள தொழிற்சங்கங்களின் ஒன்றான CITUவின் பொது செயலாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கீழ்கண்டவாறு தெரிவிக்கின்றது.

" மத்திய நிதி அமைச்சர் திரு அருண் ஜேட்லி தலைமையிலான அமைச்சர்களின் குழு 30.08.2016 அன்று பத்திரிக்கையாளர் சந்திப்பில், தொழிற்சங்கங்களின் முக்கியமான கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும், எனவே அவர்கள் வேலை நிறுத்தத்தை கைவிட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளார். இந்த அறிவிப்பு கேலிக்கூத்தானது என CITU கருதுகிறது.

குறைந்த பட்ச கூலிக்கான ஆலோசனைக் குழுவின் பரிந்துரைகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளதாக நிதி அமைச்சரின் அறிவிப்பு உண்மைக்கு புறம்பானது. தொழிற்சங்க பிரதிநிதிகள் குறைந்த பட்ச கூலியாக ரூ.18,000/- வழங்க வேண்டும் என உறுதியாக வலியுறுத்தியதால் 30.08.2016 அன்று கூடிய குறைந்த பட்ச கூலிக்கான ஆலோசனைக்குழுவின் கூட்டம் முடிவு ஏதும் எட்டப்படாமல் முடிவடைந்தது. அரசாங்கம் ஒரு நாளைய குறைந்த பட்ச கூலியாக 350/-ரூபாயும் (மாதத்திற்கு ரூ.9,100/-) என முன்மொழிந்து விட்டு தற்போது வேலை நிறுத்தத்தில் ஈடுபட உள்ள தொழிலாளர்களை குழப்ப முயற்சிக்கிறது.

மத்திய அரசு ஊழியர்களுக்கு கடந்த ஆண்டு போனஸ் தொகையை உயர்த்தி இருப்பது அரசாங்கத்தின் பெருந்தன்மை அல்ல. இதனை இவர்கள் எப்போதோ செய்திருக்க வேண்டும். பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட போனஸ் சட்டத்தின் மீதான வழக்குகளை முடிவுக்கு கொண்டு வருவது அரசாங்கத்தின் கடமை. பாஜக ஆட்சி செய்யும் மத்திய பிரதேசம், ராஜஸ்தான் உள்ளிட்ட மாநில அரசாங்கங்கள் இந்த சட்டத்தின் அமுலாக்கத்தை நீதிமன்ற வழக்குகளை காரணம் காட்டி நிறுத்தி வைத்துள்ளது. இவர்களை கட்டுப்படுத்தாத கேரள மற்றும் கர்நாடக உயர் நீதிமன்றங்களின் உத்தரவுகளை சுட்டிக்காட்டி இவர்கள் இப்படி செய்வது இவர்களின் உண்மை சொரூபத்தை காட்டுகிறது.

மேலும் 45 நாட்களுக்குள் தொழிற்சங்கங்களை அட்டவணைப்படுத்துவதற்காக மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கங்களுக்கு ஆலோசனை தெரிவிக்கும் என்று அரசு கூறுகிறது.

இதற்கு ஆலோசனை தேவையில்லை. சட்ட ரீதியான ஏற்பாடுகள் தேவை. ஆனால் தொழிலாளர் நலச்சட்டங்களில் அரசு வைத்துள்ள முன்மொழிவுகளில், தொழிற்சங்கங்களை அட்டவணைப்படுத்த முடியாத அளவிலான பல கட்டுப்பாடுகளை வைத்துள்ளது.

மத்திய அரசின் திட்ட ஊழியர்களான அங்கன்வாடி, மதிய உணவு மற்றும் ASHA ஊழியர்களுக்கான சமூக பாதுகாப்பு தொடர்பான கேள்விகள் பத்திரிக்கையாளர் சந்திப்பில் வந்த போது இவர்கள் எல்லாம் தொழிலாளர்கள் அல்ல, சேவை செய்பவர்கள்(Volunteers) என்று நிதியமைச்சர் தெரிவித்துள்ளார். ஆனால் தேசிய ஜனநாயக கூட்டணி அரசாங்கம் இருந்த போது நடைபெற்ற 46ஆவது இந்திய தொழிலாளர் மாநாட்டில், இந்த திட்ட ஊழியர்களை தொழிலாளர்களாகவே அங்கீகரித்து குறைந்த பட்ச கூலி உரிமையினை இவர்களுக்கு வழங்க வேண்டும் என்ற முந்தைய இந்திய தொழிலாளர் மாநாட்டு முடிவுகளையே உறுதிப்படுத்தியது என்பதை மத்திய நிதி அமைச்சருக்கு நினைவு படுத்த விரும்புகிறோம்.

திட்ட ஊழியர்களுக்கான சமூக பாதுகாப்பு பலன்கள் தொடர்பாக ஒரு குழு அமைக்கப்படும் என்று மத்திய அமைச்சர் தெரிவித்துள்ளார். கடந்த 2015 செப்டம்பர் 2 வேலை நிறுத்தத்திற்கு முன் இதே அறிவிப்பையே இந்த அரசாங்கம் வெளியிட்டது. ஆனால் இதுவரை ஏதும் நடைபெற வில்லை. ஒரு பகுதி ESI பலன்களை பெறுவதற்கு அங்கன்வாடி ஊழியர்களும், மதிய உணவு ஊழியர்களும் தங்களின் சம்பளத்தில் இருந்து ரூ.250.- வழங்க வேண்டும். இது அங்கன்வாடி ஊழியர்களின் ஊதியதில் 8.33%. அங்கன்வாடி உதவியாளர்களின் ஊதியத்தில் 16%. மதிய உணவு ஊழியர்களின் ஊதியத்தில் 25%. ஆனால் இதர பகுதி தொழிலாளர்கள் முழுமையான பலன்கள் பெறுவதற்காக ESI திட்டத்திற்கு தங்களின் ஊதியத்தில் 1.75% வழங்கினால் போது என்ற நிலை உள்ளது. எனவே அரசாங்கத்தின் முன்மொழிவு என்பது ஊழியர்களை ஏமாற்றும் வேலையே தவிர வேறு எதுவும் இல்லை.

எனவே பத்திரிக்கையாளர் சந்திப்பில் அரசாங்கம் தெரிவித்துள்ள அறிவிப்புகள் வெற்று அறிவிப்புகளே. எனவே இவை ஒட்டு மொத்தமாக நிராகரிக்க வேண்டும். வேலை நிறுத்தம் நடைபெற உள்ள இந்த நேரத்தில் ஊழியர்களை குழப்பும் அரசாங்கத்தின் இந்த வேலையை முறியடிக்கும் வண்ணம் நடைபெற உள்ள செப்டம்பர் 2 வேலை நிறுத்தத்தை பெரும் வெற்றி பெற செய்வோம்" என அந்த அறிக்கை தெளிவாக்குகிறது.

செப்டம்பர் 2 வேலை நிறுத்த நாளன்று ஆர்ப்பாட்டங்களை நடத்துக:- செப்டம்பர் 2 நடைபெற உள்ள வேலை நிறுத்தத்திற்கான தயாரிப்பு பணிகள் தொடர்பாக பரிசீலனை செய்த BSNL ஊழியர் சங்கத்தின் அகில இந்திய மையம், இந்த வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்கிட இறுதி கட்ட பணிகளை சிறப்பாக செய்திட மாவட்ட/ மாநில சங்கங்களை கேட்டுக் கொண்டுள்ளது. அத்துடன் பத்திரிக்கையாளர்களை அழைத்து பெரிய அளவிலான விளம்பரத்துடன் இந்த வேலை நிறுத்த நாளன்று அலுவலகங்கள் முன்பு பெருந்திரள் ஆர்ப்பாட்டங்களை நட்த்த வேண்டும் என்றும் நமது அகில இந்திய சங்கம் அறிவிப்பு வெளீயிட்டுள்ளது.

வெற்றிகரமாக்குவோம் செப்டம்பர் 2 வேலை நிறுத்தத்தை!

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

(A.**பாபு ராதாகிருஷ்ணன்**)

மாநில செயலாளர்